**கவனிக்க.-** *26.04.2024 ஆம் திகதிய 2382 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்பப்படவில்லை.*

**கவனிக்க.-** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2024 ஆம் ஆண்டுக்கான திருகோணமலை மாவட்டத்தின் நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப் பட்டியல் ஒன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2383 - 2024 මැයි මස 03 වැනි සිකුරාදා - 2024.05.03

*2383 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 198 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 198 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, மே மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மே மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


197 - B 82565 - 353 (2023/05)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவதுபிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப்பத்திரத்தினை இரத்து செய்வதற்கான (104 ஆம் பிரிவு) அறிவித்தல்

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் பஸ்பாகேகோரளைபிரதேசசெயலாளர்பிரிவின்பிரதேசசெயலாளர்(மாகாணங்களுக்கு இடையிலான) ஆர். எம். ஷமீர நுவன் ரத்நாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1995.08.21 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/பஸ்/563 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய எண் 09. மெதகஹவதுர, நாவலப்பிட்டியவில் வசிக்கும் கரஹதுங்கல ஓவிடே சண்ரா பத்மிணீ அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் ஏ4/159 ஆம் இலக்கத்தின் கீழ் 1995.11.13 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்த போதிலும் அவர் பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை எனஅறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 24.05.2024 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

கண்டி நிருவாக மாவட்டத்தில் பஸ்பாகே கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் பஸ்பாகே கோரளை இபுல்பிடிய வடக்காக கிராம அலுவலர் பிரிவில் மெதகஹவதுர என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும் - நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட எல் 61/17/4 ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தில் ...................... ஆல் தயாரிக்கப்பட்ட ................ ஆம் இலக்க "துண்டாடப்படும் வரைபடத்தில் ............... ஆல் தயாரிக்கப்பட்ட முபீ மஹ 3910 ஆம் இலக்க நிரல் குறிப்பில் 24 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் 0.168 ஹெக்டயார் றூட் - பேர்ச் - விஸ்தீரணத்தை உடையதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகை பீபீ யில் எல்லைகளைக் கொண்டதுமான அரசகாணி இபுல்பிடிய :

| | |
|---|---|
| வடக்காக காணித்துண்டு : | இலக்கம் 28 மற்றும் 23; |
| கிழக்காக காணித்துண்டு : | இலக்கம் 12, 41 மற்றும் இலக்கம் 25; |
| தெற்காக காணித்துண்டு : | இலக்கம் 25, 28; |
| மேற்காக காணித்துண்டு : | இலக்கம் 28. |

ஆர். எம். ஷமீர நுவன் ரந்நாயக்க,
பிரதேச செயலாளர்,
பஸ்பாகே கோரளே.

2023, செத்தெம்பர் 12.

04 - 73

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/75963.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NCP/PLC/L09/23/04.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

பொலன்னறுவை மாவட்டம், தமன்கடுவ பிரதேச செயலத்திற்குச் சொந்தமான இல. 188, கல்லால்ல மேற்கு கிராம அலுவலர் பிரிவின் கல்லால்ல கிராமத்தின் காணி உத்தியோகத்தர் மூலம் வரையப்பட்ட நில வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறான 03 றூட், 25.05 பேர்ச் அளவுடைய அரச காணியினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு திரு. காலி முதியென்சலே கெதர மஹம்மது இஸ்மாயில் சாஹிது மஹம்மது ரியால் என்னும் நபர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:**

வடக்கு : சகீனா, மிரான், சதாம், சாஹிக் என்பவர்கள் அனுபவிக்கும் காணி;

கிழக்கு : வீதி ஒதுக்கம்;
தெற்கு : வீதி ஒதுக்கம்;
மேற்கு : வீதி ஒதுக்கம் மற்றும் ரஹ்மான், நஹீரா, நூஹு என்பவர்கள் அனுபவிக்கும் காணி.

03. கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2024.02.01 ஆம் திகதியிலிருந்து)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2024.02.01 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் குடும்பத்தினுள் கைமாற்றம் செய்வதோ அல்லது இக்காணியினை குத்தகைக்குப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டான துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் தவிர்ந்த வேறு துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் தொடர்பில் அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரு ந்தாகும். குத்தகையானது தொடர்ச்சியாகச் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் செலுத்தப்படாத எஞ்சிய குத்தகைப் பணத்திற்கு 10% தண்டப் பணம் அறவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப் படும்.

கே. ஜீ. பீ. சௌமியா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஏப்பிறல் 19.

05 - 23

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

### அட்டவணை - 2024

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 03.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.04.2024 |
| | | வெள்ளி | 10.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.04.2024 |
| | | வெள்ளி | 17.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.05.2024 |
| | | புதன் | 22.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.05.2024 |
| | | வெள்ளி | 31.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.05.2024 |
| **யூன்** | .. | வெள்ளி | 07.06.2024 | .. | நண்பகல் 12 | புதன் | 22.05.2024 |
| | | வெள்ளி | 14.06.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.05.2024 |
| | | வியாழன் | 20.06.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.06.2024 |
| | | வெள்ளி | 28.06.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.06.2024 |
| **யூலை** | .. | வெள்ளி | 05.07.2024 | .. | நண்பகல் 12 | வியாழன் | 20.06.2024 |
| | | வெள்ளி | 12.07.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.06.2024 |
| | | வியாழன் | 19.07.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.07.2024 |
| | | வெள்ளி | 26.07.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.07.2024 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.